# வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## மாதிரிப் பரீட்சை – 4

## வரலாறு - I

தரம்:- 11 நேரம் :- 1 மணித்தியாலம்

பகுதி I

1. வரலாற்றைக் கற்பதனால் பல்கலாசார நாட்டினில் வாழும் ஒருவரால் பின்பற்றக் கூடிய முக்கிய நற்பண்பு.
   1. இன மத ஐக்கியத்தை மதித்தல் 2. தன்னைப் பற்றிய தெளிவு
   3. தேவையற்றதைப் புறந்தள்ளல் 4. கௌரவமாக வாழுதல்

2. இலங்கையில் ஆரம்பகால கல்வெட்டுக்கள் மிகக் குறுகிய அமைப்பில் கானப்பட்டன. அவற்றில் காணப்பட்ட விபரம்.
   1. அரசர்களது வர்ணனைகள்
   2. படைத் தளபதிகளது விபரங்கள்
   3. தனி நபர்களால் பௌத்த பிக்குகளுக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புக்கள்
   4. வர்த்தக நடவடிக்கைகள்

3. இலங்கையில் காணப்படும் சிதைவுகள் அதிகம் காணப்படும் இடமாகக் கருதப்படுவது.
   1. சிகிரியா 2. யாப்பகூவ 3. தம்பதெனியா 4. பொலன்னறுவ

4. இலங்கையின் இரத்தினக் கற்கள், துணிவகைகள், நீர்ப்பாசனப் பொறிமுறைகள் பற்றி எழுதப்பட்ட இந்திய நூல்.
   1. அர்த்த சாஸ்திரம் 2. இராஜதரங்கனி 3. திவ்வியப் பிரபந்தம் 4. சிலப்பதிகாரம்

5. பின்வரும் நாடுகாண்பயணிகள் கண்டுபடித்த நாடுகளை இணைத்து சரியான விடையினை தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1. | பர்தலோமியஸ் டயஸ் | A | ஸ்பனியோலா |
| 2. | கொலம்பஸ் | B | பிலிப்பைன்ஸ் |
| 3. | வாஸ்கொடகாமா | C | புயல்முனை |
| 4. | மகலன் | D | இந்தியா |

   1. CDBA 2. ADBC 3. CADB 4. ACBD

6. நீர்வள நாகரிக காலத்தில் காணப்பட்ட பதவிகள் பொறுப்புக்களை இணைத்து சரியான விடையினை தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1. | அசிக்காகிக | A | ஆவணங்களுக்குப் பொறுப்பு |
| 2. | படகரிக | B | கொடி பதாதைகளுக்குப் பொறுப்பு |
| 3. | மகலே | C | திறைச்சேரிக்குப் பொறுப்பு |
| 4. | ஐத்தக்காஹக | D | போர் உபகரணங்களுக்குப் பொறுப்பு |

   1. DCAB 2. DACB 3. ACDB 4. BADC

7. பின்வரும் குளங்களுக்கு நீரினை வழங்கிய நதிகளை இணைத்து சரியான விடையினைத் தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1. | மாகல்ல வாவி | A | மீ ஓயா |
| 2. | தப்போ வாவி | B | தெதுறு ஓயா |
| 3. | பராக்கிரம சமுத்திரம் | C | அம்பன் கங்கை |

   1. BAC 2. CAB 3. ABC 4. CBA

8. 'அபிசீனியா' என அழைக்கப்பட்ட நாடு
   1. மொறோக்கோ 2. இத்தாலி 3. எதியோப்பியா 4. எகிப்து

9. 1947 - 1977 வரை இலங்கையின் பிரதமர் பதவி வகித்தவர்களை ஒழுங்குபடுத்தி சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.
   1. D. S சேனநாயக்கா, ஜோன் கொத்தலாவல, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, தகநாயக்கா
   2. D. S சேனநாயக்கா, S. W. R. D பண்டாரநாயக்க, டட்லி சேனநாயக்கா, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க
   3. D. S சேனநாயக்கா, தகநாயக்கா, ஜோன் கொத்தலாவல, J. R. ஜெயவர்த்தன
   4. D. S சேனநாயக்கா, டட்லி சேனநாயக்கா, S. W. R. D பண்டாரநாயக்க, J. R. ஜெயவர்த்தன

10. நிலத்தை பாரிய உற்பத்தித் தானமாக்கிய நிலஅடைப்பு முதன் முதல் நிகழ்ந்த நாடு
    1. இத்தாலி 2. இங்கிலாந்து 3. பிரான்ஸ் 4. ரஷ்யா

11. இந்தியாவில் கங்கைக் கரையில் அமைந்த அரசுகளில் மிகப் பெரும் பேரரசாக எழுச்சியுற்ற அரசு
    1. அவந்தி 2. வத்சய 3. மகதம் 4. கோசவம்

12. பேர்லின், ரோம், டோக்கியோ, அச்சு என அழைக்கப்பட்ட நாடுகள் முறையே

1. ஜேர்மனி ஜப்பான் இத்தாலி
2. இத்தாலி ஜப்பான் ஜேர்மனி
3. ஜப்பான் இத்தாலி ஜேர்மனி
4. ஜேர்மனி இத்தாலி ஜப்பான்

13. ஸ்ரீ விக்கிரம இராஜ சிங்கனுக்கு எதிராக செயற்பட்ட மகா அதிகாரங்களுள் முக்கியமான இருவர்

1. பிலிமத்தலாவை, மடுகல்ல
2. எஹுவப்பொல, மொலலிக்கொட
3. பிலிமத்தலாவை, எஹுவப்பொல
4. ஹெப்பிட்டிப்பொல, மடுகல்ல

14. இலங்கையின் வெளிநாட்டுத் தொடர்புகளுள் கலாசாரத் தொடர்பாக கருதக்கூடியது

1. விஜயனும் தோழர்களும் வருகை
2. பிராமிய எழுத்து சிங்கள அரிச்சுவடி வடிவம் பெற்றது
3. பராக்கிரமபாகு தமிழ் கைதிகளை கொண்டுவருதல்
4. அசோகன் தேவநம்பிய தீசன் நட்பு

15. கமிக, பருமக, கம்போஜக எனப்படுபவர்

1. கிராமமக்கள்
2. கிராமமுதியோர்
3. கிராமஆண்கள்
4. கிராமசபைத்தலைவர்

16. லோதி வம்சத்தவர்களின் ஒற்றுமையின்மையால் இந்தியாவில் அமையப் பெற்ற அரசு

1. பஹுமனி அரசு
2. மொகலாயப் பேரரசு
3. துக்ளக் அரசு
4. விஜயநகரப் பேரரசு

17. 1634 ல் செனரத்திற்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம்

1. அட்டாப்பிட்டி ஒப்பந்தம்
2. மல்வானை ஒப்பந்தம்
3. கன்னொருவ ஒப்பந்தம்
4. கண்டி ஒப்பந்தம்

18. முதன் முதல் கைத்தொழில் புரட்சி ஏற்பட்ட தொழில்

1. நெசவு 2. இரும்பு 3. நிலக்கரி 4. போக்குவரத்து

19. கி. பி. 1765 இல் கீர்த்திஸ்ரீ இராஜ சிங்கன் ஆட்சியின் போது மலையகத்தை ஆக்கிரமித்த ஒல்லாந்து ஆளுனர்

1. பன் எக் 2. பன் எங்கல் பெக் 3. பன் கூன்ஸ் 4. வில்லியம் பெக்

20. பொலன்னறுவ வீழ்ச்சியின் பின் தென்மேற்கில் உருவாகிய முதல்லாவது இராச்சியம்

1. தம்பதெனியா 2. யாப்பகூவ 3. குருநாகல் 4. கம்பளை

21. அமைதியான ஆட்சியாளன், தலதாமாளிகையை மும்மாடிகள் கொண்டதாக விஸ்தரித்தான், ஒல்லாந்தருடன் நட்புறவாகச் செயற்பட்டான் இத் தகவல்களுடன் தொடர்புடைய கண்டி அரசன்

1. 2ம் இராஜசிங்கன்
2. 1ம் விமலதர்ம சூரியன்
3. சேனாசம்பந்த விக்கிரமபாகு
4. 2ம் விமலதர்ம சூரியன்

22. A யுத்தத்திற்கான சகல செலவுகளையும் கண்டி அரசன் ஏற்கவேண்டும்
B ஒல்லாந்தருக்கு வர்த்தகத் தனியுரிமையையும் துறைமுகங்களையும் தந்துதவ வேண்டும்
C உப்பளங்களின் உரிமை மலை நாட்டிற்குரியதாகும்
D கடற்கரையில் 4 மைல் அகலப் பிரதேசம் ஒல்லாந்தரிடம் கையளிக்கப்பட வேண்டும்

மேற்கூறப்பட்ட வாசகங்களில் 1638 உடன்படிக்கையுடன் தொடர்புடைய இரு வாசகங்களை தெரிவு செய்க

1. B, D 2. C, D 3. B, C 4. A,B

23. கிறிஸ்தவ திருச்சபையை முதன்முதல் விமர்சனத்திற்கு உட்படுத்தியவர்

1. ஜோன் வைக்ளிப் 2. ஜோன் கல்வின் 3. ஜோன் ஹஸ் 4. மார்ட்டின் லூதர்

24. கிழக்கு மேற்கு வர்த்தக நடவடிக்கைகளில் பிரதான மத்திய வர்த்தக நிலையமாக விளங்கிய நகரம்

1. கொன்ஸ்தாந்தி நோபின் 2. ரோம் 3. அங்காரா 4. பீஜிங்

25. கலிகால சாகித்திய சர்வக்ஞ பண்டிதன் என அழைக்கப்பட்ட தம்பதெனிய அரசன்

1. 1ம் பராக்கிரமபாகு
2. 2ம் பராக்கிரமபாகு
3. 4ம் பராக்கிரமபாகு
4. 6ம் பராக்கிரமபாகு

26. இந்தியாவின் அஜந்தா ஓவியத்தை தழுவி வரையப்பட்ட ஓவியமாகக்கருதக் கூடியது

1. லங்காதிலக சிலைமனை ஓவியம்
2. திலங்க சிலைமனை ஓவியம்
3. சிகிரியா ஓவியம்
4. கல்விகாரை வித்தியாதகுகை ஓவியம்

27. பின்வரும் விடையங்களைத் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடைத்தொகுதி

| | | | |
|---|---|---|---|
| குளக்கட்டை அரிப்பில் இருந்து பாதுகாப்பது | A | கலிங்கல் |
| கால்வாய்க்கு நீரைத் திறந்துவிடல் | B | வான் கதவு |
| குளத்தின் மேலதிக நீரை வெளியேற்றல் | C | அலைதாங்கி |
| குளத்து நீரை முழுமையாக வெளியேற்றாது பாதுகாத்தல் | D | கலிங்கற்கட்டு |

1. BCAD 2. BCDA 3. ACBD 4. CDBA

28. ஐரோப்பியர்களின் நோக்கில் கீழைத்தேசத்தில் கறுவா உற்பத்தியில் பிரதான நாடாக விளங்கியது
1. சீனா 2. மலேசியா 3. இந்தியா 4. இலங்கை

29. பின்வரும் யாப்புக்களுடன் தொடர்புடைய விடையங்களை இணைக்கும் போது கிடைக்கும் விடைத் தொகுதி

| | | | |
|---|---|---|---|
| 1. | கோல்புறூக்கமரன் | A | சட்ட நிர்வாகக் கழகத்திற்கு உத்தியோகச் சார்பற்ற மூவர் நியமனம் |
| 2. | குறூமக்கலம் | B | இராஜ காரிய சேவை நீக்கம் |
| 3. | மனிங் | C | கல்வி கற்ற இலங்கையருக்கு வாக்குரிமை |
| 4. | மனிங் டிவன்ஷயர் | D | மாகாண ரீதியான தேர்தல் தொகுதி |

1. BCAD 2. BCDA 3. ACBD 4. CDBA

30. இலங்கைக்கு 'டொமினியன் அந்தஸ்து' வழங்கிய யாப்பு
1. சோல்பரி 2. டொனமூர் 3. குறூ மக்கலம் 4. மனிங்

31. ஆளுநர் பிரட்டி நோத்தினால் நீக்கப்பட்ட இராஜகாரிய முறையை மிண்டும் செயற்படுத்திய ஆளுநர்
1. றொபேட் பிரவுண்றிக் 2. தோமஸ் மொயில்டன்
3. வில்லியம் கிரகரி 4. வெஸ் றிச்வே

32. கி.பி. 1824 இல் எட்வேட் பான்ஸ் ஆளுநரால் தனியார் கோப்பித்தோட்டம் ஆரம்பிக்கப்பட்ட இடம்
1. சிங்ஹப் பிட்டி 2. தும்பறை 3. கன்னொருவ 4. பேராதனை

33. பின்வரும் மன்னர்களால் கட்டப்பட்ட விகாரைகளை இணைக்கும் போது கிடைக்கம் சரியான விடைத்தொகுதி

| | | | |
|---|---|---|---|
| 1. | தேவநம்பியதீசன் | A | ஜேதவனராம |
| 2. | துட்டகைமுனு | B | தூபராம |
| 3. | வலகம்பா | C | அபயகிரி |
| 4. | மகாசேனன் | D | ருவன்வெலிசாய |

1. BDCA 2.CADB 3.DCBA 4.ABCD

34. கி.பி. 17ம் நூற்றாண்டளவில் இந்தியாவிலும் அமெரிக்காவிலும் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்த போட்டியிட்ட இரு ஐரோப்பிய நாடுகள்
1. போர்த்துக்கல், ஸ்பானியா 2. ஒல்லாந்து, ஸ்டானியா
3. பிரான்ஸ், பிரித்தானியா 4. போர்த்துக்கல், பிரித்தானியா

35. இந்து சமுத்திரத்தில் உள்ள மொரிசியஸ் தீவிலும் ஆபிரிக்காவின் நன்னம்பிக்கை முனையிலும் வர்த்தக நிலையங்களை நிறுவிய நாடு
1. பிரான்ஸ் 2. ஒல்லாந்து 3. போர்த்துக்கல் 4. பிரித்தானியா

36. மாகாண ரீதியான தேர்தல் தொகுதி முறையை அறிமுகப்படுத்திய சீர்திருத்தம்
1. மனிங் 2. மக்கலம் 3. டொனமூர் 4. சோல்பரி

37. ஆளுநர் வில்லியம் கிரகரியினால் புனரமைக்கப்பட்ட குளம்
1. இறக்காமம்குளம் 2. கந்தளாய்குளம்
3. கலாவாவி 4. யோத வாவி

38. பிரித்தானியர் காலத்தில் குயினைன் என்ற மருந்துத் தயாரிப்பிற்கு உதவிய பயிர்
1. சிங்கோனா 2. கறுவா 3. தேயிலை 4. கோப்பி

39. கியூ கடிதத்துடன் தொடர்புடைய மன்னன்
1. 16ம் லூயி 2. 1ம் யோன் 3. 14ம் லூயி 4. 2ம் ஒரேஞ்வில்லியம்

40. ரஷ்யா ஜப்பான் யுத்தம் முடிவடைய நியூ ஷம்புயரில் போஸ்ட்டர்மவுத் துறைமுகத்தில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்குக் காரணமானவர்
1. தியோடர் ருஸ்வெல்ட் 2. பிராங்கிளின் 3. கரிங்ருமன் 4. பராக் ஒபாமா



# வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## மாதிரிப் பரீட்சை - 4

## வரலாறு - II

தரம்:- 11 | நேரம் :- 3 மணித்தியாலம்

### பகுதி I

அ. I) பின்வரும் இடங்களைத் தரப்பட்ட இலங்கைப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

| | | | |
|---|---|---|---|
| கன்னொருவ | கல்ஓயா நீர்த்தேக்கம் | குந்தலகால | கங்காஶ்ரீபுர |
| நாச்சதுவ வாவி | மாகம | கந்தளாய் குளம் | ஜஜ்ஜரநதி |
| கம்பல்தொட்ட | கதுருகொட விகாரை | | |

II) பின்வரும் இடங்களைத் தரப்பட்ட உலகப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

| | | | |
|---|---|---|---|
| ஜெருசலேம் | ஹீரோசிமா | சிங்கப்பூர் | மத்தியதரைக்கடல் |
| பர்மா (மியன்மார்) | போர்த்துக்கல் | நன்நம்பிக்கை முனை | காவேரி நதி |

ஆ. I)
- A - வைத்துல்யவாத பிக்குகளை நாட்டை விட்டு வெளியேற்றிய மன்னன்
- B - மகாவம்சத்தை எழுதிய மகாவிகாரைப் பிக்கு
- C - இலங்கையின் அமைவிடம் பற்றிய சரியான தகவல்களைத் தந்த கிரேக்க புவியியலாளர்
- D - கம்பளை இராச்சியக் காலப்பகுதியில் படையெடுத்து வந்த சீனத் தளபதி

II)
- அ - படத்தில் காணப்படும் கலைப் படைப்பினைப் பெயரிடுக.
- ஆ - இதனை நிர்மானித்த அரசன்
- இ - இக்கலைப் படைப்பு உருவாக்கப்பட்ட காலம்
- ஈ - இவ்விகாரை அமைந்துள்ள விகாரைத் தொகுதி

III)
- அ. - படத்தில் காணப்படுபவரைப் பெயரிடுக.
- ஆ - இவரது தாய்நாடு
- இ - இவர் பௌத்த மதத்தைத் தழுவக் காரணமான வாதம்
- ஈ - இவரால் தோற்றுவிக்கப்பட்ட பௌத்த சங்கம்

### பகுதி II

2. **இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனது வாழ்க்கை முறையை அறிவோம்**

1. இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த குகைகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

2. அ. புத்த பெருமான் பரிநிர்வாணம் அடைந்த தினத்தில் இலங்கைக்கு வந்த ஆரியக்குழு
   ஆ. கணதர ஓயாக் கரையில் குடியிருப்பு அமைத்த அமைச்சன்
   இ. இலங்கையின் மேற்குக் கரையில் அமைந்த ஆரியக் குடியிருப்பு
   ஈ. பத்தகச்சானா குழுவினர் வந்தடைந்த இலங்கைத் துறைமுகம் (4 புள்ளிகள்)

3. அ. இலங்கைக்கு வந்த ஆரியர் குழுவினர் உலர்வலய ஆற்றங்கரைகளை தெரிவு செய்தமைக்கான மூன்று காரணங்களைத் தருக.
   ஆ. பத்தகச்சானாவின் சகோதரர்கள் அமைத்த குடியிருப்புக்கள் 2 தருக. (5 புள்ளிகள்)

4. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் வாழ்க்கை முறையை A இருப்பிடம் B உணவு C சடங்கு சம்பிரதாயம் என்பவற்றின் அடிப்படையில் விளக்குக.

3. **அனுராதபுர, பொலன்னறுவ கால மன்னவர்களது பணிகளை மதிப்பிடுவோம்.**

1. அ. அனுராதபுரத்தின் முதல் மன்னன் -
   ஆ. அனுராதபுரத்தின் இறுதி மன்னன் -
   இ. லம்பகர்ண வம்சத்தின் முதல் ஆட்சியாளன் - (3 புள்ளிகள்)

2. பின்வரும் மன்னர்களது ஆட்சிக் காலத்தில் இலங்கையை ஆக்கிரமித்தவர்களை எழுதுக.
   அ. அசேலன்
   ஆ. 4ம் சேனன்
   இ. வலகம்பா
   ஈ. சூரதிஸ்ஸ

3. வலகம்பா மன்னன் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற

A - சமய ரீதியான இரு சம்பவங்களைத் தருக.

B - அரசியல் ரீதியாக நடைபெற்ற ஒரு சம்பவத்தினை எழுதுக.

மேலே குறிப்பிட்ட விடயங்களில் ஒன்றை விளக்கி எழுதுக. (5 புள்ளிகள்)

4. பொலன்னறுவை ஆட்சியாளர்களான

A - 1ம் விஜயபாகுவின் பணிகள் இரண்டு தருக.

B - 1ம் பராக்கிரமபாகுவின் பணிகள் இரண்டு தருக.

மேற்கூறப்பட்ட அரசர்களது பணிகளுள் ஒன்றை விளக்கி எழுதுக. (6 புள்ளிகள்)

4. "இலங்கையின் நீர்வள நாகரிக கால வாழ்க்கை முறைகளை அறிவோம்"

1. நீர்ப்பாசனத்துடன் தொடர்புடைய தொகுதிகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

2. A - நீர்ப்பாசன முறையொன்றின் தேவைக்கான இரு காரணங்கள் தருக.

B - நீர்ப்பாசனத் தொகுதியொன்றின் தோற்றத்திற்கு வித்திட்ட இரு பௌதிகக் காரணிகளை எழுதுக. (4 புள்ளிகள்)

3. நீர்வள நாகரிக கால பொருளாதார முறையின்

A - விவசாயம் B - வர்த்தகம் ஆகியவற்றின் நடவடிக்கைகளுக்கு இவ்விரண்டு உதாரணம் தந்து ஒன்றை விளக்குக. (5 புள்ளிகள்)

4. நீர்வள நாகரிகக் கால மக்கள் வாழ்க்கை முறைகளை 3 விடயங்களின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளிகள்)

5. "இலங்கையில் மேலைத்தேசத்தவர்களது வருகையால் ஏற்பட்ட மாற்றங்களை அறிவோம்"

1. பின்வரும் துறைமுகங்களை வந்தடைந்த மேலைத்தேசத்தவர்களை எழுதுக.

1. காலி
2. மட்டக்களப்பு
3. திருகோணமலை (3 புள்ளிகள்)

2. A - கி. பி. 1521 விஜயபாகு கொலைக்கு முன் இலங்கையில் காணப்பட்ட இராச்சியங்களுள் இரண்டை எழுதுக.

B - 1521 இன் பின் உருவாகிய புதிய இராச்சியங்கள் இரண்டு எழுதுக. (4 புள்ளிகள்)

3. போர்த்துக்கேயர் இலங்கை அரசியலில் தலையிடுவதற்கு காரணமாய் இருந்த கோட்டை அரசர்களான

A - 7ம் புவனேகபாகுவின் செயற்பாடு ஒன்று எழுதுக.

B - தர்மபாலனின் செயற்பாடுகள் இரண்டு எழுதுக.

மேலே குறிப்பிட்ட செயற்பாடுகளுள் ஒன்றை விளக்குக. (5 புள்ளிகள்)

4. A - கண்டி அரசர்களுடன் போர் செய்த போர்த்துக்கேயத் தளபதிகள் இருவரின் பெயரை எழுதுக.

B - கண்டி அரசர்களுடன் சமாதானமாக இருப்பதற்காக ஒல்லாந்தர் பின்பற்றிய யுக்திகள் இரண்டு எழுதுக.

C - போர்த்துக்கேயர், ஒல்லாந்தரால் கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட முடியாமைக்கான இரு காரணங்கள் எழுதுக. (6 புள்ளிகள்)

6. "இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியும் அதனால் ஏற்பட்ட மாற்றங்களையும் அறிவோம்"

1. பின்வரும் ஆண்டுகளில் இலங்கையின் கரையோரத்தை ஆட்சி செய்த பிரித்தானிய ஆளுநர்களை எழுதுக.

1. கி.பி. 1798
2. கி.பி. 1805
3. கி.பி. 1812

2. A - இலங்கையில் தேயிலைப் பயிர்ச்செய்கை பரவலுக்குப் பங்களித்த காரணிகள் இரண்டு தருக.

B - இலங்கையில் இறப்பர் பயிர்ச்செய்கையின் பரவலுக்குப் பங்களித்த காரணிகள் இரண்டு தருக.

3. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விருத்திக்காகப் பிரித்தானிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் வாழ்வாதாரப் பயிர்ச் செய்கைக்கான விவசாயம் பாதிப்படைந்தது. இரு விடயங்களின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளிகள்)

4. இலங்கையின் கல்வி நடவடிக்கைகளுக்காக பின்வருவோர் முன்வைத்த ஆலோசனைகள் இவ்விரண்டு குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக.

1. கோல்புறூக் குழு
2. மோர்கன் குழு
3. C. W. W. கன்னங்கரா (6 புள்ளிகள்)

## பகுதி III

7. "இந்தியப் பேரரசுகள் பற்றிய தகவல்களை அறிவோம்"

1. வட இந்திய 16 பேரரசுகளில் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெற்ற அரசுகளுள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

2. I - மகதப் பேரரசின் எழுச்சிக்கு காரணமான மன்னர்கள் இருவரை எழுதுக.
   II - A - மௌரிய வம்ச முதல் ஆட்சியாளன் யார்?
   B - குப்த வம்ச முதல் ஆட்சியாளன் யார்? (4 புள்ளிகள்)

3. அசோக மன்னனால் ஆற்றப்பட்ட
   A - சமூகப் பணிகள் இரண்டு
   B - சமயப்பணி ஒன்று

4. குப்தர்கால நிர்வாகம் தொடர்பான விடயங்கள் மூன்று குறிப்பிட்டு விளக்குக.

8. 1. உரோமப் பேரரசு மீது மேற்கொள்ளப்பட்ட மூன்று படையெடுப்புக்களைத் தருக. (3 புள்ளிகள்)

2. ஐரோப்பாவில் மானியமுறைக் காலத்தில் காணப்பட்ட
   A - அரசியல் பண்புகள் இரண்டு தருக.
   B - பொருளாதார பண்புகள் இரண்டு தருக. (4 புள்ளிகள்)

3. A - மறுமலர்ச்சிக்கால (1) மானிடவியலாளர் (2) ஓவியக் கலைஞர் (3) விஞ்ஞானி ஒவ்வொரு பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களுள் ஒருவரின் பணிகளை விளக்குக. (5 புள்ளிகள்)

4. A - ஐரோப்பாவில் தோன்றிய தேசிய அரசுகள் 2 எழுதுக.
   B - தேசிய அரசுகளின் பண்புகள் 2 எழுதுக.
   C - ஐரோப்பாவில் சமய சீர்திருத்தத்தின் விளைவுகள் 2 எழுதுக.
   குறிப்பிட்டு ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

9. "மத்திய கால ஆசியாவில் இஸ்லாமியப் பரவல், இலங்கை தென்கிழக்காசியாவுடன் கொண்டிருந்த தொடர்புகளை அறிவார்"

1. A - இஸ்லாமிய சமய ஸ்தாபகர் யார்?
   B - இஸ்லாமிய சமயப் பாதுகாவலர்கள் (கலீபா) இருவரை எழுதுக. (3 புள்ளிகள்)

2. A - டில்லி சுல்தானிய அரச வம்சங்கள் இரண்டை எழுதுக.
   B - விஜய நகரப் பேரரசின் முக்கிய ஆட்சியாளர்களில் இருவரை எழுதுக. (4 புள்ளிகள்)

3. இலங்கைக்கும் தென்கிழக்காசியாவுக்கும் இடையே காணப்பட்ட தொடர்புகள் 2 குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

4. மாமன்னர் அக்பரின் ஆட்சிச் சிறப்புக்கள் 3 ஐ குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

10. "1ம், 2ம் உலகப் போர்களின் வரலாற்றுச் சம்பவங்களை அறிவார்"

1. 1ம் உலகப் போரில் பங்கு கொண்ட பிரதான நேச அணிநாடுகள் 3 ஐ எழுதுக. (3 புள்ளிகள்)

2. A - 2ம் உலக மகாயுத்தம் ஏற்படக் காரணமாக இருந்த நாஸிஸவாதத் தலைவர்
   B - 2ம் உலக மகாயுத்தத்தில் பிரதான பங்காளியாக இருந்த அச்சு அணியைச் சேர்ந்த ஆசிய நாடு
   C - 2ம் உலக மகாயுத்தத்தில் பிரதமராகிய வின்சன் சேர்ச்சிலின் தாய் நாடு
   B - 1940 இல் தனது நாட்டின் மீது படையெடுத்த ஜேர்மனிப் படைகளிடம் சரணடைந்த நேச அணி நாடு (4 புள்ளிகள்)

3. பல நாடுகளை வெற்றி கொண்ட ஜேர்மனிப் படைகள் ரஷ்ய நாட்டில் தோல்வி கண்டமைக்கான காரணங்களுள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

4. ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்புக்களுள் 3 ஐ குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. (6 புள்ளிகள்)



## மாதிரிப் பரீட்சை - 4

## வரலாறு - III

பகுதி I இல் "ஆ" பகுதியில் உள்ள II ஆம் III ஆம் வினாக்களுக்குரிய படங்கள்

II ஆம் வினா



III ஆம் வினா







III ஆம் வினா
II ஆம் வினா
பகுதி I இல் "ஆ" பகுதியில் உள்ள II ஆம் III ஆம் வினாக்களுக்குரிய படங்கள்
வரலாறு - III
மாதிரிப் பரீட்சை - 4